DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-200/2019

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.வீரலட்சுமி | Caste: | |
| Father's Name: | | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A4 Absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. )

28.04.2026– 03.30 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மேலக்கிடாரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். வழக்கின் வாதியை தெரியும்.

2. கடந்த 05.07.2017 ம் தேதி பொன்னுச்சாமிபுரத்தை சேர்ந்த பஞ்சவர்ணம் என்பவர் இறந்து விட்டார். அவருடைய இறப்பிற்கு நாங்கள் சென்றிருந்தோம். மதியம் 03.30 மணிக்கு மேல் இறந்த நபரை இடுகாட்டிற்கு கொண்டு சென்றார்கள். இடுகாட்டில் செல்லும் வழியில் எனது அண்ணனுக்கு சொந்தமான நிலத்தில் வைத்து கொள்ளிகுடம் உடைத்தார்கள்.

3. எனது மதினி பஞ்சவர்ணம் ஏன் இவ்வாறு எங்கள் இடத்தில் உடைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். எதிரிகள் தர்மலிங்கம் எனது மதினியை தாக்கினார். எதிரி சத்தியமூர்த்தி கண்ணத்தில் அடித்து விட்டார். பாண்டி மற்றும் லட்சுமி ஆகியோர் எனது மதினியை தலைமுடியை பிடித்து இழுத்தார்கள்.

4. எதிரிகள் அனைவரும் எனது மதினியை தேவிடியா என்று சொல்லி அசிங்கமாக பேசினார்கள். காயம்பட்ட பின்பு கீழச்செல்வனூர் காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்திற்கு புகார் அளித்தார். மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

1. இந்த வழக்கின் புகார்தாரர் எனது அண்ணனின் மனைவி என்றால் சரிதான். புகார்தாரரின் கணவர் எனது பெரியம்மா மகனின் அண்ணன் ஆவார். சண்டை நடந்ததாக சொல்லப்படும் இடம் பொன்னுச்சாமிபுரம் கிராமம் என்றால் சரிதான். எனது ஊர் மேலக்கிடாரம். எனது ஊருக்கும் எனது அண்ணனின் வீட்டிற்கும் சுமார்

எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கீ.மீ தூரம் இருக்கும்.

2. நான் முதல் விசாரணையில் கூறிய "பஞ்சவர்ணம் என்பவரின் இறப்பிற்குதான் நான் பொன்னுச்சாமிபுரம் சென்றிருந்தேன்" என்று போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே மாலையில் எனது அண்ணன் வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், மேலக்கிடாரம் கிராமத்தில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் எதிரிகள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் பஞ்சவர்ணம் இறந்த நபரின் உடலை புகார்தாரரின் வீட்டின் வழியாக எடுத்துச்செல்ல கூடாது என்று தகராறு செய்தார் என்றாலும், எதிரிகளை பார்த்து சாதியை சொல்லி திட்டினார் என்றாலும் சரியல்ல. இதே சம்பவம் தொடர்பாக எனது அண்ணி மீது எதிரிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் எனது அண்ணியை குற்றவாளி என்று கூறி தண்டனை வழங்கியுள்ளது என்றால் சரிதான்.

4. பஞ்சவர்ணம் மீது எதிரிகள் புகார் கொடுத்ததால் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக எதிரிகள் மீது பஞ்சவர்ணம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் எனது அண்ணி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.04.28 06:31:26 +0000